பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 11 வெள்ளிக்கிழமை 25.03.2022 கதிர் 140

**இது ரகசியம் அல்ல!**

அரசுப் பங்காளிகளாக இருந்து அமைச்சரவையை விட்டு வெளியேறிய விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார உட்பட்ட குழுவினர் நேற்று கண்டியில் மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசிபெற்றிருக்கின்றனர். ☞2



## ராஜபக்ஷ அரசு விரைவில் கவிழும்

### அடித்துக் கூறுகின்றார் கம்மன்பில

ராஜபக்ஷ அரசு விரைவில் கவிழும் என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

நிமல் லான்சாவின் வெளியேற்றமானது, சாதாரண சம்பவம் அல்ல. அரசில் இருந்து பெருமளவானோர் வெளியேறவுள்ளனர் என்பதற்கான ஆரம்பகட்ட சமிக்ஞையே அது.

அரசு மீது பலர் அதிருப்தியில் உள்ளனர். அவர்கள் விரைவில் வெளியேறுவார்கள். எனவே, இந்த அரசு விரைவில் கவிழும். ☞2

# ஜனாதிபதி – கூட்டமைப்பு இன்று சந்தித்துப் பேச்சு!

## அரசியல் தீர்வு தொடர்பில் கூடிய கவனம்



கொழும்பு, மார்ச் 25

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் காலை 10 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. ☞2

## அரசியல் தீர்வைக் கண்டால் இலங்கைக்கு உதவுவதற்கு புலம்பெயர் தமிழர்கள் தயார்



### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படுமானால், இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு புலம்பெயர் தமிழர்கள் தயாராகவே உள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: ☞2

## அரசியல் இலாபத்துக்காகவே எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு!

### சுமந்திரன் எம்.பி. சாட்டையடி

சர்வகட்சி மாநாட்டில் எதிர்க் கட்சிகள் பங்கேற்காமை தவறான முடிவாகும். அரசியல் இலாபத்துக்காகவே அந்தக் கட்சியினர் இந்த முடிவை எடுத்திருக்கக்கூடும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் தற்போதுஜனாதிபதித்தேர்தலை நடத்த முடியாது. இந்த விடயம் கூட சஜித் பிரேமதாஸவுக்குத் தெரியவில்லை என்றும் ☞2

## சஜித் அணியைச் சேர்ந்த 8 பேர் ரணிலுடன் விரைவில் சங்கமம்

### அமைச்சர் மஹிந்தானந்த கூறுகின்றார்



சஜித் அணி உறுப்பினர்கள் எட்டு பேர் இன்னும் இரு வாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவார்கள்.

இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று சபையில் தகவல் வெளியிட்டார். ☞2

## பெரும்பான்மைப் பலத்தை இல்லாமலாக்கி 'மொட்டு' ஆட்சிக்கு முடிவு கட்டியே தீருவோம்

### கண்டியில் வைத்து விமல் சபதம்





அசிங்கமான அமெரிக்கரை வைத்துக்கொண்டு இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே, அரசின் சாதாரணப் பெரும்பான்மைப் பலத்தையும் விரைவில் ☞2

### அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட

## அத்தியாவசியப் பொருள்களின் விலை 40 வீதம் வரை அதிகரிப்பு

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் 30 முதல் 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளன என்று இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசி, சீனி, பருப்பு ஆகியனவற்றின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளன என்று அத்தியாவசியப் பொருள்கள் ☞2

## கொழும்பில் இருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பு, கடவத்தை 9ஆம் தூண் பகுதியில் நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவரின் சடலம் பேலியகொட வைத்தியசாலையிலும், மற்றையவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

## ஐ.தே.கவால் ஆட்சியை கவிழ்க்கவே முடியாது!

### எம்முடன் இணைவதே சிறந்தது; சஜித் அணி பகிரங்க அறிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவர்தான் இருக்கின்றார். அந்தக் கட்சியால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எனவே, அந்தக் கட்சியில் உள்ள அரசியல் பிரமுகர்கள் எம்முடன் இணைவதே மேலானது. ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர்களுடன் மகாநாயக்கர்கள் நடத்திய கலந்துரையாடலில் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு பீறிட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அதேசமயம், நேற்றுமுன்தினம் கொழும்பில் ஜே.வி.பி. நடத்திய அரச எதிர்ப்புப் பேரணியிலும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடே பிரதிபலித்ததாக கொழும்பு அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கிடையில் –

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல உட்பட அரசுக்குள் ஒன்று கூடியிருக்கும் – அதிருப்திக் குழுவின் திட்டம், நோக்கம் யாது என்பது பற்றிய விவரங்கள் நேற்று அவர்களின் கண்டி விஜயத்தை–அடுத்து சற்று வெளியாகியிருப்பதாக அந்த விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கூட்டணிக்கு 145 இடங்கள் கிடைத்தன. ஆளும் கூட்டணிக்கு சார்பான நிலைப்பாட்டில் போட்டியிட்ட கட்சிகள், முஸ்லிம் கட்சிகளில் இருந்து வழமை போல ஆளும் தரப்புக்குக் குத்துக் கரணம் அடித்தவர்கள் போன்றோரின் ஆதரவும் சேர ஆளும் தரப்பு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத் தாண்டியது. 154 எம்.பிக்களின் ஆதரவு முன்னர் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது.

அதில் விமல் வீரவன்ஸ உதய கம்மன்பில அணியோடு ஏற்கனவே பதினாறு எம்.பிக்கள் அரசுக்குள் இருந்த படி அர சுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

அரசுடன் முண்டிக் கொண்டு நிற்கும் சு.கவினரையும் சேர்த்தால் இது 31ஆக உயரும்.

இன்னொரு எட்டுப் பத்து எம்பிக்களை அரசுப் பக்கத்தில் இருந்து பிடுங்கினால் அரசு நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையை இழந்து கவிழும் நிலைமை ஏற்படும். இதைக் குறி வைத்துத்தான் விமல் அணி இப்போது காரியமாற்றத் தொடங்கியிருக்கின்றது.

புதிய அரசு ஒன்றை உருவாக்கும் பெரிய திட்டம் ஏதும் விமல் அணிக்குக் கிடையாதாம். ஆக, இருக்கும் அரசைக் கவிழ்ப்பது, பஸில் ராஜபக்ஷ இல்லாத மாற்று அரசு ஒன்று – அது இடைக்கால ஏற்பாட்டு அரசாகக் கூட இருக்கலாம் – உருவாக வழி சமைப்பதுதான் விமல் அணியின் திட்டம். அப்படிச் செய்வதன் மூலம் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு ஒரு பாடம் கற்பிப்பதுதான் அந்த அணியின் சதியாலோசனை வியூகம் என்கின்றனர் விமர்சகர்கள்.

உள்கொழுவல் நன்றாகத்தான் சூடு பிடித்திருக்கின்றது. நடக்கட்டும். நடக்கட்டும்!

★ ★ ★

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை பத்து மணிக்கு நடைபெறுகின்றது.

அதையொட்டி கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று தமது இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இந்தக் கலந்துரையாடலில் இன்றைய கூட்டத்தில் பங்கேற்கவிருக்கும் மாவை சேனாதிராசா, சுமந்திரன், சிறிதரன், கலையரசன், சித்தார்த்தன் ஆகியோர் பங்குபற்றினர். சார்ள்ஸ் நிர்மலநாதன் அச்சமயம் நாடாளுமன்றத்தில் உரையாற்ற வேண்டியிருந்தமையால் கூட்டத்துக்கு வரவில்லை. வெளிநாடு சென்றிருக்கும் சாணக்கியன் எம்.பி. நேற்றிரவே கொழும்பு வந்த சேரவிருந்தார்.

ரெலோவின் மூன்று எம்.பிக்கள் தவிர்ந்த கூட்டமைப்பின் எஞ்சிய எழு எம்.பிக்களும், தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும் இன்றைய கூட்டத்தில் பங்கு பற்றி ஜனாதிபதியுடன் பேசவிருக்கின்றனர்.

இந்தப் பேச்சின் மீது நம்பிக்கை கொள்ளவும், பேச்சுக்கான களச் சூழலை ஏற்படுத்தவும் சில திட்டவட்டமான – சாதகமான – நடவடிக்கைகளை பகிரங்கமாக எடுத்து வெளிப்படுத்துமாறு இன்றைய சந்திப்பில் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவது என நேற்றைய கலந்துரையாடலில்தீர்மானிக்கப்பட்டதாகஅறியவந்தது.

ஆக இருபத்தினான்கு மணிநேர விஜயமாகக் கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் வெளிவிவகார கீழ் நிலைச் செயலாளர் நூலண்ட் அம்மையார் கூட்டமைப்புடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்தவிருக்கும் பேச்சுக்களை வரவேற்று, ஆக்கபூர்வமான அம்சம் என்று தெரிவித்திருக்கின்றமையும், மாகாண சபைத் தேர்தல்களை காலம் தாழ்த்தாமல், நடத்துமாறு அரசுத் தலைவரை அவர் வலியுறுத்தியிருக்கின்மையும் தங்களை ஊக்கப்படுத்தியிருக்கின்றன என்று இன்றைய பேச்சுக்களில் பங்கு பற்றும் கூட்டமைப்புத் தரப்பு கருதுவதாகத் தெரிகின்றது. நேற்றுமுன்தினம் சர்வகட்சிக் கூட்டத்தில் தமிழ்த் தலைவர்கள் கூறிய கருத்துகளுக்கு பிரதான கட்சிகளிடமிருந்து கிடைத்த பிரதிபலிப்புகளும் தங்களுக்கு சாதகமான கருத்து நிலையை உருவாக்கியுள்ளன என்று சம்பந்தன் – சுமந்திரன் இணை கருதுகின்றது.

இன்று நண்பகலில் முதல் சுற்றுச் சந்திப்பு நடந்த பின்னர் நிலைமை எத்தகையது, பயன்தரும் திசையில் பேச்சுகள் முன்னேறுமா என்பவற்றை ஊகிக்கக் கூடியதாக இருக்கும் என நம்பலாம். அதுவரைப் பொறுத்திருப்போம்.

- மின்னல் -

### அரசியல் இலாபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் கூறினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது நாம் அரசியல் தீர்வு பற்றியே பேச்சு நடத்துவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### சஜித் அணியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிதி அமைச்சர் பதவியைப் பெறுவதற்காக ஹர்ஷ டி சில்வா ஓட்டோவில் பயணிக்கின்றார். வீதிகளில் நடமாடுகின்றார். எதிரணி ஆட்சியைப் பிடிப்பதென்பது பகல் கனவாகும்.

சஜித் அணியில் உள்ள 8 பேர் ரணிலுடன் பேச்சு நடத்துகின்றனர். இன்னும் இரு வாரங்களில் ரணில் பக்கம் சென்று விடுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நாட்டில் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை எனவும் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

### ஜனாதிபதி - கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

புதிய அரசமைப்பு, தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலேயே இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளன.

அத்துடன், புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 15 ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனினும், ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு ஐக்கிய மக்கள் சக்தியினர் நடத்திய போராட்டத்தால் இன்று வரை இந்தப் பேச்சு பிற்போடப்பட்டது.

### அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து கடனுதவி பெறப்பட்டதன் பின்னர், தற்போதுள்ள டொலருக்கான கேள்வி குறைவடையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் கட்டணம் அதிகரிப்பு

மலையகம் மற்றும் வடமாகாண வழித்தடங்களின் இன்டர் சிட்டி மற்றும் சிறப்பு ரயில் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விலை உயர்வு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என இலங்கை ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி வரையிலான புதிய கட்டணங்களின் விவரம் பின்வருமாறு:-

* முதல் வகுப்பு - ரூ.1000
* 2 ஆம் வகுப்பு - ரூ.500
* 3 ஆம் வகுப்பு - ரூ.300

வடக்கு ரயில் கட்டணங்கள் வருமாறு:-

* கொழும்பு கோட்டையிலிருந்து குருநாகல் வரையிலான முதல் வகுப்பு கட்டணம் - 600 ரூபாவிலிருந்து 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
* கொழும்பு கோட்டையில் இருந்து அனுராதபுரத்திற்கான முதல் வகுப்பு கட்டணம் - 1,200 ரூபாவில் இருந்து 1,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
* கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான முதல் வகுப்புக் கட்டணம் - 1,400 ரூபாவிலிருந்து 1,700 ரூபாவாக அதிகரித்துள்ளது.

### ஐ.தே.கவால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:

ஐக்கிய தேசியக் கட்சி என்பது எமது தாய்க்கட்சி. அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் எம்முடன்தான் இருக்கின்றனர். அந்தக் கட்சியை நாம் மறக்கமாட்டோம். ஆனால், அந்தக் கட்சியின் அரசியல் கட்டமைப்பில் தற்போது ஒருவர்தான் இருக்கின்றார்.

எனவே, அந்தக் கட்டமைப்பால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எம்மால்தான் அது முடியும். எனவே, எம்முடன் கூட்டணி அமைப்பதுதான் ஆரோக்கியமான விடயமாக அமையும் – என்றார்.

### அரசியல் தீர்வைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சர்வகட்சி மாநாட்டின்போது புலம்பெயர் தமிழர்களின் முதலீடு தொடர்பில் பல தரப்பினரும் கருத்துக்களை முன்வைத்தனர். நாமும் அது பற்றி கதைத்தோம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுமானால் புலம்பெயர் தமிழர்கள் நிச்சயம் உதவுவார்கள் என்று நான் சுட்டிக்காட்டினேன். புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான பாலமாக இருப்பதற்கு நாம் தயார்.

இலங்கையின் பொருளாதாரத்தை விடவும் புலம்பெயர் தமிழர்களின் பணபலம் உள்ளது. எனவே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதற்கு அப்பாலான அரசியல் தீர்வொன்று வழங்கப்படுமானால் நிச்சயம் உதவி கிட்டும்.

ஆனால், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வே அவசியம். மாறாக ஆளுநர் வசம் அதிகாரங்கள் இருக்கக்கூடாது. மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் வசமே அதிகாரம் இருக்க வேண்டும் – என்றார்.

### ராஜபக்ஷ அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதியின் சர்வகட்சி மாநாடு, ஏமாற்று அரசியலின் ஓர் அங்கமாகும் – என்றார்.

### பெரும்பான்மைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இல்லாமல் செய்வோம். இந்த ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில உட்பட '11 கட்சிகள் அணி'யின் பிரதிநிதிகள் நேற்று கண்டிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றமையுடன் சமகால நிலைவரம் பற்றியும் உரையாடினர். இதன்போது 'முழு நாடும் சரியான பாதைக்கு' எனும் தமது அணியின் வேலைத்திட்டத்தின் உள்ளடக்கங்கள் பற்றி மகாநாயக்க தேரர்களுக்கு அவர்கள் விளக்கமளித்தனர்..

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட விமல் –

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்தோம். அமைச்சரவையில் இருந்து எம்மை நீக்கினர். ஆனால், நாம் வேலைத்திட்டத்தைக் கைவிடமாட்டோம். அதனைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மிக மோசமானவர். அவருக்கு எப்படிகே கதைப்பதென்றுகூட தெரியாது. அது சர்வக்கட்சி மாநாட்டில் புலனானது.

எனவே, இந்த அசிங்கமான அமெரிக்கரை வைத்துக்கொண்டு பயணிக்க முடியாது. எனவே, விரைவில் அரசின் சாதாரண பெரும்பான்மையையும் இல்லாமல் செய்வோம். இந்த ஆட்சிக்கு முடிவு கட்டுவோம் – என்றார்.



# சபரிமலை
# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்
## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச **Delivery** -
அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு
வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முக்கிய பேச்சு இன்று!

**கோட்டாபய ராஜபக்ஷவின் தற்போதைய அரசுக்கும், தமிழர் தரப்புக்கும் இடையிலான நேரடிப் பேச்சு இன்று ஆரம்பமாகின்றது.**

**தேசிய இனப்பிரச்சினை தீர்வு காணப்படாமல் கடந்த ஏழரை தசாப்தங்களாக நீடித்து வரும் நிலையில், பௌத்த – சிங்களத் தீவிரப் போக்குடைய அரசுத் தலைவர் முதல் தடவையாக தமிழர் தரப்பை அழைத்துப் பேசப் போகின்றமையால் இது முக்கிய நிகழ்வாகக் கணிக்கப்படுகின்றது.**

**தீர்வுக்கான முயற்சிகள் கடந்த சுமார் மூன்று ஆண்டுகளாகத் தடைப்பட்டுக் கிடக்கையில், வெறும் ஆரம்ப அசுமாத்தம் மட்டுமே இன்றைய பேச்சு.**

**இன்றைய சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல் ஏதும் இல்லை. எதைப் பற்றிப் பேசப் போகின்றோம், என்ன பேசப் போகின்றோம் என்று தெரியாமல்தான் இந்தப் பேச்சுக்கு தமிழர் தரப்பு – தமிழ்க் கூட்டமைப்பு – செல்கின்றது.**

**தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சி எதனையும் இந்த அரசுத் தலைவருடனும், அவரின் அரசுடனும் ஆரம்பிக்கலாமா, பேச்சுக்கான வாய்ப்புகள் ஏதேனும் இருக்கின்றனவா என்பதை அறியும் பூர்வாங்கச் சந்திப்பாகத்தான் இன்றைய பேச்சு அமையக் கூடும்.**

**அதாவது, இது, பேச்சுக்கான பேச்சு மட்டுமே.**

**தமிழ்க் கூட்டமைப்பு தரப்பில் எட்டுப் பிரதிநிதிகள் வரை பங்குபற்றுகின்றமையால் இன்றைய பேச்சுகளில் ஒளிவு மறைவு, பகிரங்கமாக வெளிப்படாத நிகழ்ச்சி நிரல் ஏதும் இருக்கும் என்று சந்தேகப்படுவதற்கு இடமிருக்காது.**

**ஆனாலும், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கலந்துரையாடலின் ஆரம்பமாக இன்றைய சந்திப்பைக் கருதி, அதைத் தொடர்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய தயாரா, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான கலந்தாலோசனைகளைத் தான் தமிழ்த் தலைவர்களோடு நடத்துகின்றார் என்ற செய்தியை – தகவலை – தனது பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்குக் கொண்ட வாக்காளர்களுக்கு வெளிப்படையாக அம்பலப்படுத்திக் காட்ட அவர் விரும்புவாரா என்பவை எல்லாம் இன்றைய சந்திப்பின் பின்னர்தான் தெரியவரும்.**

**ஆனால் இன்றைய சந்திப்பில், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது குறித்து மட்டுமே அவதானம் செலுத்தப்படும் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார் என சில செய்தி வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**அப்படி நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நியாயத் தீர்வு ஒன்றை எட்டப்படுமானால், புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் தாராளமாக முதலீடு செய்ய முன்வருவார்கள் என்றும் –**

**நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து நாடும் மக்களும் மீளுவதில் அது காத்திரமான பங்களிப்பாக அமையும் என்றும் – சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**பொருளாதார நெருக்குவாரத்தின் பல பக்க அழுத்தங்களுக்குள் சிக்கியிருக்கும் நாட்டின் தலைமை, தேசிய இனப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண இதய சுத்தியுடன் முன்வருமானால் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் அது மீளுவதற்க வழி கிடைக்கும்.**

**இந்த யதார்த்தம் அரசுத் தலைமைக்குப் புரியுமானால் இன்றைய பேச்சை நல்லதோர் – ஆக்கபூர்வமான – தீர்வு முயற்சிக்கான சந்திப்பாக அது பயன்படுத்தும். பார்ப்போம். என்ன செய்யப் போகின்றது என்பதை...!**

# ஜனாதிபதி கோட்டாபய வரலாற்றில் இடம்பெறுவார்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அதீத நம்பிக்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரலாற்றில் இடம்பெறுவார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

ஜனாதிபதி செய்த செயல்களால் உங்கள் உயிர் காப்பாற்றப்பட்டது என்பதை மரியாதையுடன் நினைவுபடுத்துகிறேன்.

இந்த நாட்டு மக்களும், உங்களுக்கு வாக்களித்த மக்களும், எமக்கு வாக்களித்த மக்களும் காப்பாற்றப்பட்டனர். 2 லட்சம் பேர் இறப்பார்கள் என்றீர்கள். ஒட்சிசன் இல்லை என்கிறீர்கள். நீங்கள் சொன்ன பொய்கள் உங்களுக்கு நினைவிருக்கிறது.

எண்ணெய் கொண்டு வர டொலர்கள் இல்லை. ஆனால் தார் கொண்டு வரப்படுவதாக கூறினீர்கள். ஆனால் அரசு தார் கொண்டு வருவதில்லை. தனியார் மூலம் தார் கொண்டுவரப்படுகிறது. கொரோனா தொற்று நிலைமையிலும் இந்த நாட்டில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது

கொவிட் பிரச்சினை இல்லாத நிலையிலும் மக்களுக்கு வரிசையில் இருக்க நேரிட்டது. கப்பல் வரும்வரை காலிமுகத்திடலில் காத்திருக்க நேர்ந்தது, உங்கள் தரப்பு 15 லட்சம் வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

உங்கள் கட்சிக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. ஜனாதிபதி வேட்பாளர்கள் நிரம்பியுள்ளனர். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவரைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் நாங்களும் இருக்கிறோம்.

அதனால் பைசஸர் தடுப்பூசி ஏற்றி ஜனாதிபதி கோட்டாபய அவரைப் பாதுகாத்தார். அவர் இருக்க வேண்டும். அவர் பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் எண்ணெய் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். வாயு பிரச்சினைகளைத் தீர்ப்போம்.

இவை தற்காலிகமான பிரச்சினைகள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இந்த சவாலை நாம் நிச்சயமாக வெற்றிகொள்வோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் எரிவாயுவின் நெருக்கடியால் உணவக உரிமையாளர்கள் பாதிப்பு

எரிவாயு நெருக்கடி காரணமாக உணவகங்களை வியாபாரத்துக்காகத் திறப்பது நெருக்கடியாக மாறியுள்ளது என உணவக உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன

இதனால் தங்களது வியாபாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க அநுரகுமார தெரிவித்துள்ளார்

தற்போதுள்ள எரிவாயு மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, நகரங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேதன பசளை பயிர்ச் செய்கையில் முல்லை மாவட்ட படைப்பிரிவு சாதனை

## முல்லை மாவட்ட 64 ஆவது படைப்பிரிவு சாதனை



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள 64 ஆவது படைப்பிரிவின் தலைமை வளாகத்தில் சேதன பசளை மூலம் மரக்கறி செய்கையை மேற்கொண்டு நல்ல விளைச்சலை எதிர்கொண்டுள்ளதாக படைத்தரப்பு விவசாயிகளுக்கு விளக்கம் கொடுத்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளை அழைத்த 64 ஆவது படைத்தரப்பு, சேதனப் பசளையைப் பயன்படுத்தி செய்கை பண்ணிய புடலங்காய், பாகற்காய், பயிற்றங்காய், முருங்கை போன்ற செய்கைகளின் விளைச்சலை விவசாயிகளுக்குக் காட்டி அது தொடர்பான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்கள்.

ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளர், கமநல சேவை நிலைய அதிகாரி, விவசாய விரிவாக்கற்பகுதி உத்தியோகத்தர்கள், ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆகியோரை அழைத்த படையினர், தங்களின் சேதன பசளை பயன்பாடு தொடர்பிலான செய்கைகளைக் காட்டி விளக்கமளித்துள்ளமையுடன் சிறந்த அறுவடையைத் தாம்பெற்றுள்ளமையுடன் விவசாயிகளுக்கு முன்னுதாரணமாகக் காட்டியுள்ளார்கள்.

ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைய சேதன பசளையைப் பயன்படுத்தி இவ்வாறான செய்கை மேற்கொண்டுள்ளதாகவும் இவ்வாறு விவசாயிகள் குறிப்பாக மரக்கறி செய்கையாளர்கள் இதில் வெற்றி காணலாம் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் சில மாவட்டங்களில் மீண்டும் காற்றில் தூசு துகள் செறிவு அதிகரிப்பு

நாட்டின் சில மாவட்டங்களில் மீண்டும் காற்றில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் உள்ளிட்ட சில மாவட்டங்களிலேயே இவ்வாறு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட புவிச் சரிதவியல் நிபுணர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த மாவட்டங்களில் தூசு துகள்களின் செறிவு 100 முதல் 150 இற்கு இடையில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வளிமண்டலத்தில் தூசு துகள்களின் செறிவு 100 இற்கும் குறைவாகவே காணப்படல் வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தெற்காசிய நாடுகளில் அதிகரித்துள்ள வளிமாசடைவால் இலங்கையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுவாசக் கோளாறுடையவர்களை அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட புவி சரிதவியல் நிபுணர் சரத் பிரேமசிறி கோரிக்கை விடுத்துள்ளார்.

## மின்சாரம் தாக்கி இளைஞன் திராய்மடு பகுதியில் சாவு!

தினமும் கவனவீனமான செயற்பாடுகளால் பல்வேறு அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன. கவனவீனத்தால் உயிரொன்று பறிபோன துயரச்சம்பவம் மட்டக்களப்பில் பதிவியாகியுள்ளது.

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்மடு பகுதியில் புதன்கிழமை மாலை மின்சாரத்தில் தாக்குண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திராய்மடு ஐந்தாம் குறுக்கு வீதியில் வசிக்கும் கோகிநாதன் நிதுர்ஷன் என்னும் 22 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புதன் மாலை வீட்டில் கதவு ஒன்றை பொருத்துவதற்காக பணியிலீடுபட்டுக் கொண்டிருந்தபோது மின்சாரத்தில் பொருத்தப்பட்டிருந்த துளையிடும் கருவியின் வயர் கதவில் இணைக்கப்பட்டிருந்த தகரத்தில் பட்டிருந்த நிலையில் அந்தத் தகரத்தில் துளையிடும் கருவியால் துளையிட முயற்சித்தபோது மின்சாரத்தில் குறித்த இளைஞர் தாக்கப்பட்டுள்ளார்.

மின்சாரம் தாக்கப்பட்டவுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோதிலும் அங்கு அவர்சிகிச்சைபலனின்றிஉயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்கான வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை கொக்குவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த இளைஞன் கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பொறியியல் துறைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர். குறித்த இளைஞனின் மரணம் அப்பகுதியை சோகத்தில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு கிலோ கஜு 7 ஆயிரம் ரூபா!

துப்புரவு செய்யப்படாத மர முந்திரி (கஜு) இறக்குமதி நிறுத்தப்பட்டதையடுத்து, ஒரு கிலோ மர முந்திரி விலை 7 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

புத்தாண்டு காலங்களிலும் மர முந்திரிக்கான கேள்வி அதிகரிக்கும். உள்நாட்டு மர முந்திரிக்கு (கஜு) சிறந்த சந்தை வாப்பை ஏற்படுத்தும் நோக்கில், முந்திரி (கஜு) இறக்குமதியை அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

அண்மையில் ஒரு கிலோ கிராம் மர முந்திரி (கஜு) 250 ரூபா முதல் 350 ரூபாவரை விற்பனைசெய்யப்பட்டநிலையில் இன்று ஒரு கிலோ முந்திரியின் (கஜு) விலை 800 ரூபாவாக உயர்ந்துள்ளதாகவும் மர முந்திரி (கஜு) கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாரங்கா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நாள்களில் மர முந்திரிக்கான (கஜு) கேள்வி அதிகரித்துள்ளதால் அதன் விலை உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார். மர முந்திரி கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் ஊடாக ஒரு கிலோ கிராம் முந்திரிப் பருப்பு ரூ.3 ஆயிரத்து 500 முதல் 5 ஆயிரம் ரூபா வரையிலான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மார்ச் மாத இறுதியில் இருந்து முந்திரி (கஜு) அறுவடை செய்யப்படும் என்றும், இந்த ஆண்டு சுமார் 12 ஆயிரம் மெற்றிக் தொன் அறுவடை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

முந்திரி (கஜு) அறுவடை நிறைவடைந்த பின்னர் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் முந்திரி வைன் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அது தொடர்பான பல ஆய்வு நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அச்சுவேலி மத்திய கல்லூரியில் கணினி உபகரணங்கள் திருட்டு!

### பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம் – அச்சுவேலி மத்திய கல்லூரியில் உள்ள கணினி உபகரணங்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் பரீட்சைகள் ஆரம்பித்துள்ள நிலையில் புதன்கிழமை இரவு ஏற்பட்ட மின்வெட்டை வாய்ப்பாகப் பயன்படுத்தி பாடசாலையின் கதவுகள், யன்னல் உடைக்கப்பட்டு கணினி உபகரணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

பாடசாலையின் கண்காணிப்பு கமரா மின் துண்டிப்பால் இயங்காதிருந்த நேரம் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி இனந்தெரியாதோர் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த கொவிட் காலத்தின் போதும் பாடசாலையில் தங்கியிருந்து சிலர் அங்குள்ள பொருள்களைச் சூறையாடிச் சென்றனர்.

இருப்பினும் அது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் புதன்கிழமை மாலை குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

திருட்டு இடம்பெற்ற பாடசாலையின் வளாகத்தினுள் பொலிஸாரின் மோப்ப நாய் மற்றும் தடயவியல் பொலிஸார் உள்ளிட்டோர் தடயங்களைச் சேகரித்தனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## உலக காசநோய் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி!

வவுனியாவில் காச’நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றுள்ளது.

உலக காசநோய் தினமான நேற்று (வியாழக்கிழமை) வவுனியா மாவட்ட வைத்தியசாலை காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றிருந்தது.

இதன்போது காச நோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்று காலை 9.30 மணிக்கு காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன் பின்னர் காசநோயை முடிவுக்குக் கொண்டு வர முதலிடுவோம், உயிர்களைக் காப்பாற்றுவோம் எனும் தொனிப்பொருளில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த பேரணி இடம்பெற்றிருந்தது.

இந்தப் பேரணி, காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக பஜார் வீதியை அடைந்து மீண்டும் வைத்தியசாலையை அடைந்திருந்தது.

இந்தப் பேரணியில் காசநோய் தொடர்பான பதாதைகளை ஏந்திய வண்ணம் குறித்த பிரிவிற்கான வைத்தியர்கள், தாதியர் கல்லூரி மாணவர்கள், சுகாதாரப் பிரிவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 17 ஆயிரத்து 553 பேருக்கு காச நோய் தொடர்பான பரிசோதனைகள் செய்யப்பட்டு 336 பேர் அடையாளம் காணப்பட்டமையுடன், 48 பேர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**WALK-IN-INTERVIEW**
**Establishment of Library of Tamilology**

A walk in interview for the post of **PROJECT ASSISTANT** on contract basis will be held on 30.03.2022 (Wednesday) at 9.30 am at the Board Room of the University.

**Qualifications:**

I. Should have passed the G.C. E. O/L Examination in 06 subjects with three credit passes including in Sinhala/ Tamil, English Language / English Literature and Mathematics.
And

II. Should have passed the G.C. E. A/L Examination with three credit passes.

**Note:** Work experience in similar projects and knowledge related to Library and Information Science would be considered as an additional qualification.

**Age:** Applications should be less than 40 years of age

**Salary:** Gross Salary of LKR 30,000.00 PM. In addition EPF 12% and ETF 3% will be paid
Candidates are required to appear with relevant certificates, NIC and **self-prepared applications**

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
24.03.2022



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் 08.04.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதி உணவகம் | கோண்டாவில், யாழ்ப்பாணம். |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000268 இற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000276 இற்கும் தனித்தனியாக மக்கள் வங்கியில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைகழக நலச்சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 021 222 6716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**24.03.2022**

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுகளை காத்தான்குடி நகரபிதா சீர்குலைக்கிறார்

## மட்டு. மாநகர முதல்வர் தி.சரவணபவன் காட்டம்

மட்டக்களப்பில் முன்னேற்றமடைந்துவரும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவை சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை காத்தான்குடி நகரசபையின் தவிசாளர் முன்னெடுத்துவருகிறார் என மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக் காலமான மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் காத்தான்குடி நகரசபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டினடிப்படையில் ஒரு முறை அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தோம். இதன்போது அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றன. நாங்கள் அப்பகுதிக்குச் சென்று அப்பகுதி மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கியிருந்தோம்.

இது தொடர்பில் காத்தான்குடி நகரசபை தவிசாளருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம். சட்டதிட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகள் என அதில் நாங்கள் தெரிவித்திருந்தோம். ஆனால் அதற்கு எந்தவிதமான பதில்களும் வழங்கப்படவில்லை. அவர் தனது செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண ஆளுநர், உரிய அமைச்சுகளுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.

2017 ஆம் ஆண்டின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகரசபையின் எல்லை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாநகரசபையின் எல்லைகளை நினைத்தவாறு மாற்றமுடியாது. இருந்தபோதிலும் பிழையான தகவல்களை வைத்துக்கொண்டு இவ்வாறான செயற்பாடுகளைக் காத்தான்குடி தவிசாளர் முன்னெடுக்கின்றமை என்பது ஓர் இன முறுகலை ஏற்படுத்துவதற்கான அடித்தளமாகவே நான் கருதுகின்றேன்.

தற்போதைய காலத்தில் இரு இனங்களும் ஒன்றாக இணைந்து எமது உரிமைகளை, தேவைகளை பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான இனமுரண்பாடுகளை ஏற்படுத்தி மீண்டும் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சியாக இதனைக் கருதவேண்டியுள்ளது.

பள்ளிவாயல்கள் ஊடாக காத்தான்குடி நகரசபையில் வரிகளை செலுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளேன்.

உடனடியாக அப்பகுதிக்கு சென்று வரிகளை அறிவீடு செய்யவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும் பணித்துள்ளேன். மேலும் இந்த அறிவுறுத்தல்களை வழங்கிய பள்ளிவாயல்களுக்கு குறித்த



அறிவிப்பு தொடர்பில் விளக்கம்கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு மேலாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வரி அறிவீடு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்ற அடிப்படையில் காத்தான்குடி தவிசாளருக்கு எதிராகவும் அறிவிப்பு செய்த பள்ளிவாயல்களுக்கு எதிராகவும் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி எல்லைப் பகுதியில் மட்டக்களப்பு மாநகரசபை உத்தியோகத்தர்களை வரி அறவீடு செயற்பாடுகளை தீவிரப்படுத்துமாறும் பணித்திருக்கிறேன். ஆணையாளர் மிக விரைவாக அதனைச் செய்வார் என நம்புகின்றேன். - என்றார்.

# சிறுவர்கள் மேற்கொள்ளுகின்ற 71 அபாயகரமான தொழில்கள்!

திருகோணமலை மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் றிஸ்வானி றிபாஸ் கருத்து தெரிவிக்கையில் -

சிறுவர்கள் மேற்கொள்ளும் அபாயகரமான தொழில்களாக 71 தொழில்கள் இனங்காணப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

அந்த தொழில்களில் சிறுவர்களை ஈடுபடுத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை சில நிபந்தனைகளைத் தவிர அவர்களை ஒருபோதும் வேலைக்கு அமர்த்த முடியாது.

தமது பெற்றோர்கள் மேற்கொள்கின்ற இலகு விவசாய செயற்பாடுகளுக்கு அவர்களை பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் ஈடுபடுத்த முடியும்.

அதேபோன்று அரசநிறுவனங்களால் கட்டணமின்றி மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் தொடர்பான நிகழ்வுகளுக்கு சிறுவர்களை ஈடுபடுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெளிவுபடுத்தினார்.

மாவட்டத்தில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

அனைத்து நிறுவனங்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு மூலமாக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளைக் கிரமமான முறையில் மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டும்.

எனவே பிரதேச செயலக ரீதியாக உள்ள உத்தியோகத்தர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் இனங்காணப்பட்ட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொள்வதன் அவசியத்தை இதன்போது மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தெளிவுபடுத்தினார்.

மாகாணத்தில் 13 சிறுவர் நன்னடத்தை அலுவலகங்கள் காணப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை, கந்தளாய், மூதூர் ஆகிய பிரதேசங்களில் இந்த அலுவலகங்கள் உள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 14 சிறுவர் இல்லங்களும் ஒரு சிறுவர் காப்பகமும் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 53 சிறுவர் இல்லங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இங்கு மொத்தமாக 1,274 சிறுவர்கள் உள்ளனர்.

மேலும், சிறுவர்களின் போசணை மட்டம், பாடசாலை இடைவிலகலும் மீள் இணைப்பும், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், பாலியல் வன்முறைகள், சிறுவர்கல்வி மேம்பாடு, உளவளத்துணை உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டொலர் நெருக்கடி தீர்ந்த பின்பே வாகன இறக்குமதிக்கு அனுமதி!

இலங்கையில் டொலர் நெருக்கடி தீர்ந்த பின்னரே வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருள்கள் என்பவற்றை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

வாகன இறக்குமதி தொடர்பில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் அத்தியாவசியப் பொருள்களை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

இந்த நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை.

டொலர் நெருக்கடி தீர்ந்த பின்னரே வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் கைது

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 இந்திய மீனவர்கள் இரண்டு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (வியாழக்கிழமை) நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி துறைமுகம் அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல இரணைத்தீவு அருகே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் முழங்காவில் கடற்படை முகாமிற்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தமிழர்களுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்!

## ஜனாதிபதியிடம் டயானா யோசனை முன்வைப்பு



இலங்கையில் முதலீடு செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே ஜனாபதியிடம் யோசனை தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றிய அவர் -

இலங்கையில் லட்சக்கணக்கான, டொலர்கள் மற்றும் பில்லியன் கணக்கான ரூபாவை முதலீடு செய்வதற்கு புலம்பெயர் தமிழர்களில் உள்ள பல குழுக்கள் தயாராக இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், புலம்பெயர் தமிழர்களுக்கு இலங்கையில் முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே ஜனாதிபதியிடம் யோசனை தெரிவித்துள்ளார்.

# கர்ப்பிணி மனைவிக்காக பலாக்காய் பறிக்க சென்றவர் மீது எல்லப்பிட்டியவில் கத்திக்குத்து!

பலாக்காய் ஒன்றை பறித்த நபர் ஒருவர் கத்தியால் குத்தி கொல்லப்பட்ட சம்பவமொன்று எல்பிட்டிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

எல்பிட்டிய, பிட்டுவல வீதியின் 2 ஆம் தூண் பகுதியில் வசிக்கும் 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கர்ப்பிணி மனைவியின் பசியைப் போக்குவதற்காக காணியின் அருகில் இருந்த பலா மரத்தில் ஏறி பலாக்காய் பறித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்போது பக்கத்து வீட்டுக்காரருடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ள நிலையில் பின்னர் பக்கத்து வீட்டுக்காரர் அந்த நபரைக் கத்தியால் குத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த நபர் எல்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

# வீரம் விலைபோகாது...



என்.சத்தியமூர்த்தி





## அக்கரை அலசல் / அக்கறை அலசல்

அண்மையில் வட மாகாணம் விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விற்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அவர் சென்ற இடங்களில் எல்லாம் போராட்டம் நடத்தினார். அவரது வருகையை அறிவிக்கும் பதாகைகளையும், அவரது உருவ பொம்மைகளையும் எரித்தனர். இவை, அவர்களது மன அழுத்தத்தையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தின என்பது உண்மை. ஆனால், உண்மை அத்துடன் நின்று விடவில்லை.

தமிழர் என்றல்ல, இலங்கை அல்லது வட மாகாணம் என்பன மட்டுமல்ல, உலகின் எந்த பகுதியிலும் ஆட்சியாளர்களால் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் படும் துன்பம் இதுதான். சர்வாதிகார ஆட்சிகளில்தான் 'மிட் நைட் நொக் ஒன் த டோர்' என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே, அது போல நடு இரவில், வீட்டு கதவை யாராவது தட்டினால், அதன் பொருள், அந்த தெருவில் உள்ள அனைவருக்குமே புரியும். அடுத்த நாளோ, அதற்கு அடுத்த நாளோ, பொலிஸ் அல்லது இராணுவ அதிகாரிகள் கண்களில் படாமல், அந்த குடும்பத்தினரிடம் இருந்து, காணாமல் ஆக்கப்பட்டவர் யார், என்று கேட்டறிந்து கொள்வார்கள். அவர் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றம் குறித்த விவரங்களின் அடிப்படையிலேயே, அவர்கள் பின்னர் அந்தக் குடும்பத்தினருடன் பழகுவார்கள். அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவார்கள். இல்லை என்றால், எந்த பச்சாதாபமும் இன்றி அவர்களை ஒதுக்கி வைத்து விடுவார்கள்.

ஆனால், இங்கு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இப்படி, ஒன்று அல்லது இரண்டு என்று குறைந்த எண்ணிக்கையில் இல்லை. மாறாக, இனப்போர் காலகட்டத்தில், ஒவ்வொருவராக என்று மட்டுமல்ல, ஐந்து, பத்து என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளனர். அவர்களில், போர் முடிந்து, சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை சார்ந்தவர்களும் இருந்தார்கள். அல்லது, அவ்வாறு சந்தேகப்படப்பட்டவர்களும் இருந்தார்கள். அவர்களை, இராணுவம் இன்னமும் சிறையில் அடைத்து சித்திரவதை செய்து வருகிறது என்று யாரும் நம்பவில்லை. என்றாலும், அவர்களது முடிவு குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று போராட்டங்கள், அரசு மற்றும் சர்வதேசத்திற்கு அழுத்தங்கள் தொடருகின்றன.

இன்னும் சொல்லப்போனால், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், காணாமல் போனவர்களே. அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றனர் என எண்ணி அவர்களது உறவினர்கள் இன்னமும் போராட்டத்தில் ஈடுபடுகின்றனரா? இவ்வாறு கேள்வி எழுப்பினால், அதற்கு பதில் இல்லை. குறிப்பிட்டு யாரையாவது கேட்டாலும் நேரடி பதில் கிடைக்காது, அவ்வாறான பதிலை எதிர்பார்ப்பது, வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதற்கு சமம்.

### தவிர்க்க முடியாத நாடகம்?

அரசிற்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு அப்பால், காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் இன்னும் யாராவது உயிருடன் இருக்கிறார்கள் என்று தெரிந்தால், அவர்கள் ஏதாவது வெளிநாட்டில், அந்த நாட்டின் பிரஜா உரிமை பெற்று வாழ்கிறார்கள் என்று அர்த்தம். பெரும்பாலும் தங்களது, உண்மையான பெயர்களை மாற்றி, பிறிதொரு பெயரில் தங்களை அந்நாட்டு அரசிடம் பதிவு செய்திருப்பார்கள்.

அந்த வகையில், முன்னாள் ஜே.வி.பி. முன்னணி வீரர்களில் ஒருவரான பிரேமகுமார் குணரத்தினம், சிறையில் இருந்து தப்பிச்சென்று, ஆஸ்திரேலியாவின் பிரஜா உரிமை பெற்று அங்கேயே வாழ்ந்து வந்தார். தமிழரான அவர் நோயல் முதலிகே என்ற புதிய பெயரையும் பெற்றிருந்தார். இனப்போர் முடிவுற்ற காலத்தில் அன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசிற்கு எதிராக, புதியதொரு இடதுசாரி போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் தாய்நாடு திரும்பி இருந்திருக்க வில்லை என்றால், அவரது உண்மையான அடையாளம் இன்று வரை தெரிந்திருக்காது.

இவ்வாறு, காணாமல் போன சிலரது விடயத்தில், அந்தந்த நாடுகளின் அரசும், அதிகாரிகளுமே அவர்களது அடையாளம் மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கு உடந்தையாக இருப்பார்கள். மனித உரிமை பாதுகாப்பின் ஒரு பகுதியாக இது பார்க்கப்படுகிறது. என்றாலும், இவர்களில் ஒரு சிலராவது, காணாமல் போனவர்களாகக் கருதப்படுவார்கள். நாட்டில் வாழும் உறவினருக்கு இந்த உண்மை தெரிந்தாலும், அவர்களை பயங்கரவாதச் சட்டம் உள்ளிட்ட முறைகளில் இருந்து காப்பாற்ற இந்த நாடகம் ஆடுவது தவிர்க்க முடியாததாகி விட்டது எனலாம்.

ஐ.நா.மனித உரிமை அமைப்பின் பிடியில் இருந்து தப்புவதற்காக அரசால் நியமிக்கப்பட்ட நீதியரசர் பரணகம ஆணையத்தின் அடிப்படை சந்தேகமே, இவ்வாறு காணாமல் போன தமிழர்களில் எத்தனை பேர், தங்களது பெயரை மாற்றிக்கொண்டோ, இல்லாமலோ, குறிப்பாக மேலை நாடுகளில் வாழ்கிறார்கள் என்பதுதான். ஆனால், ஆணையத்தின் இந்த கேள்விக்கு, எந்த மேலை நாடும் பதில் அளிக்கவில்லை என்பது வருந்தத்தக்க விடயம். அவ்வாறு அளித்திருந்தால், ஓரளவிற்காவது உண்மை வெளிப்பட்டிருக்கும். ஆனால், காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற இரு தரப்பினருமே, இது குறித்து சர்வதேசத்திற்கு எந்தவொரு அழுத்தமும் கொடுப்பதில்லை. மாறாக, சொந்த அரசையே தொடர்ந்து சாடி வருகிறார்கள்.

### ஏன் இந்த விளையாட்டு?

இனப்போர் முடிந்த சில ஆண்டுகளுக்கு பின்னர் துவங்கி, அவர்களுடைய உறவு முறைகள், இறந்தவர்களுக்கான மரண சான்றிதழ் மட்டுமாவது அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தனர். அது அவர்களது இழப்பிற்கும் கவலைக்கும் முடிவல்ல. ஏன், மருந்தும் அல்ல. அதே சமயம், மரண சான்றிதழ் இருந்தால் மட்டுமே, இறந்ததாக கருதப்படும் அந்த கணவர், மனைவி, தந்தை போன்ற உறவினரின் சொத்து உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும், என்று சுட்டிக்காட்டப்பட்டது. அது உண்மையும் கூட.

ஆனால், அவ்வாறு மரண சான்றிதழ் கொடுத்தால், அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற அத்தாட்சியை அரசே வழங்கி விட்டதற்கு சமம். அதற்கும் அப்பால் சென்று, அவர்கள் அரசின் காவலில் இருக்கும் போது இறந்து விட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள் என்றும் அரசு ஒத்துக்கொண்டு வாக்குமூலத்தில் ஒப்பமிட்டதாகவும் மனித உரிமையாளர்களால் குற்றம் சாட்டப்படுவார்கள்.

அத்தகைய முடிவை அரசு காலம் தாழ்த்தி இப்போதுதான் அறிவித்துள்ளது. இதே முடிவை, இனப்போர் முடிவுற்ற காலத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தால், அதனை கிரகித்துக் கொள்ள முடியாவிட்டாலும், மக்கள் ஏதோ ஒரு விதத்தில் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று கூட கருதலாம். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை.

போர் முடிவு குறித்து ஜனாதிபதி மஹிந்த,நாடாளுமன்றத்தில் அறிவித்த போதே, அப்பாவி தமிழர் உயிரிழப்பிற்கும் அரசு சார்பில் மன்னிப்பு கோரி அவர்கள் குடும்பத்திற்கு நஷ்டஈடு அறிவித்திருக்கலாம். அவ்வாறு அறிவிக்கலாம் என்ற கருத்தை அன்றைய ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை விடக் கொடுமை, தமிழர் வாக்குகளை பெற்று பதவிக்கு வந்த நல்லாட்சி அரசும் இது குறித்து, அறிக்கைகள் விட்டார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை.

இது போலவே, போர் முடிந்ததை தொடர்ந்து, 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், தமிழர் வாக்குகளை கேட்டு, பெரிதளவில் பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் காணாமல் போனவர்களின் உறவினர் இந்த பிரச்சினைகளை எழுப்பவில்லை. இப்போது, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று எதற்கெடுத்தாலும், ராஜபக்ஷக்களை மட்டுமே சாடும் கலாச்சாரத்தால், எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை.

வட மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போரட்டம் நடத்தினால் மட்டும் காணாமல் போனவர்கள் திரும்பி வந்து விடப் போகிறார்களா, என்ன? இல்லை, அவ்வாறு அவர்கள் திரும்பி வந்து விடுவார்கள் என்று போராட்டக்காரர்கள் நம்பினார்களா, என்ன?

அதற்கும் அப்பால் சென்று அந்த போராட்டத்தைப் படம் பிடித்து, சமூக வலைதளங்கள் மூலம் புலம்பெயர்ந்தோரிடையே பரப்பினால் மட்டும், அவர்களது கோரிக்கைகளுக்கும் கவலைகளுக்கும் விடை கிடைத்து விடுமா, என்ன? அந்த படங்கள், புலம்பெயர்ந்தோர் குழுக்கள் மூலம் சர்வதேசத்திடம் சென்றடைந்து விட்டால் மட்டும் என்ன, முடிவு வேறு விதமாகவா இருக்கப் போகிறது? அப்படி என்றால், ஏன் இந்த விளையாட்டு?

### ஈடு செய்ய முடியாது

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு ஏதாவது விதத்தில் உண்மையிலேயே உதவவேண்டும் என்று தமிழ் சமூக - அரசியல் தலைமைகளோ அல்லது புலம்பெயர்ந்தோரோ நினைத்தார்கள் என்றால், அவர்கள் அரசிடம் இருந்து கேட்டு, எந்தவிதமான பயன்களை பெறுக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தலாம். காரணம், சர்வதேச அழுத்தத்தினாலோ, அல்லது உண்மை சுடும் என்ற மன அழுத்தத்தினாலோ, அரச தலைமை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து முக்கிய முடிவுகளை, காலம் தாழ்த்தியேனும் அறிவித்துள்ளது.

அதன் படி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இறந்து விட்டார்கள் என்று பொருள்படும் படி அவர்கள் பெயர்களில் மரண சான்றிதழ் அளிக்க தயாராக இருப்பதாக அரசு தற்போது அறிவித்துள்ளது. அது போன்றே, இறந்தவர்களின் குடும்பங்களுக்குத்தலா ஒரு லட்சம் 'ரூபாய்' நஷ்டஈடு அளிப்பதாகவும் முடிவு செய்துள்ளது.

இந்த அறிவித்தல்களை தொடர்ந்தே, பிரதமர் மஹிந்த, வட மாகாணம் விஜயம் செய்தார். அப்போது பேசிய அவர், இழந்த உயிர்களுக்கு ஈடு செய்ய முடியாது. அது தவிர, வட மாகாணத்திற்கு, தனது அரசு அனைத்து வளர்ச்சி, பணிகளையும் இனப்போர் முடிந்த காலகட்டத்தில் முன்னெடுத்தது, என்று கூறினார். ஆனால், தனது பதவி காலத்திற்கு பின்னர் வந்த நல்லாட்சி அரசு அவ்வாறு எதுவும் செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினார். இரண்டுமே உண்மையான விடயங்கள்தான்.

இந்தப் பின்னணியில், போராட்டக்காரர்கள், ஒரு குழுவாகவோ, பல குழுக்களாகவோ பிரதமரை நேரடியாக சந்தித்துப் பேச்சில் ஈடுபட்டிருக்கலாம். இடை தரகர்கள் யாருமே இல்லாமல் பேசியிருந்தால், அப்போது, அரசு அறிவித்திருக்கும் நஷ்டஈடு எவ்வாறு மிகவும் குறைவாக உள்ளது என்று அவருக்கு சுட்டிக்காட்டி இருக்கலாம். அதன் அடிப்படையில், அதிக நஷ்டஈடு கேட்டிருக்கலாம்.

அதற்கு அடுத்த படியாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களில் இருந்து ஒருவருக்கு அரசு பணி கொடுக்கப்பட வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை முன் வைத்து, பேச்சு நடத்தி இருக்கலாம். அது போன்றே, பிரதமர் விஜயம் மேற்கொண்ட காங்கேசன்துறை சீமெந்து ஆலை, மீள் திறக்கப்பட்டால், அங்கும், காணாமல் போனோரின் உறவினருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூட போராட்டம் நடத்தி இருக்காலம்.

இனப்போர் துவங்கிய காலம் தொட்டு, தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை தமிழர்கள், அங்குள்ள அரசு மற்றும் அரசியல் தலைமைகளுக்கு அழுத்தம் கொடுத்து, இவ்வாறுதான், அகதிகள் முகாமின் தரத்தை உயர்த்திப் பெற்றுள்ளார்கள். அவர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி மற்றும் அரசு வழங்கும் ரேஷன் உணவுப் பொருள்கள் சலுகை விலையில் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆங்கிலத்தில் ஒரு சொல் உண்டு. 'டிஸ்க்ரீன் ஈஸ் பெட்டர் பார்ட் ஆப் வாலர்.' அதனை பேரறிஞர் அண்ணாதுரை அழகாக தமிழ் படுத்தி இருப்பார்: 'வீரம் விலை போகாது - விவேகம் துணைக்கு வாராவிட்டால்.'

தற்போதைய சூழலில், காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் உறவுகள் செய்ய வேண்டியது, போராட்டங்களை முன்னெடுப்பது அல்ல. அரசை குற்றம் சாட்டுவதோடு நிறுத்திக் கொள்வதும் அல்ல. மாறாக, அவர்கள் விட்டுச்சென்ற குடும்பத்தவர்களுக்கு பொருளாதார பாதுகாப்புகளை பெற்றுக் கொள்வதே..

(09ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## திருமுறைகள் கூறும் ஆகம வழிபாட்டு முறைகள்

ஆலயங்களில் தீபாராதனை வழிபாடு முக்கியமாகக் கருதப்படுகிறது. நாயன்மார்கள் சோதியாக இறைவனைக் கருதிவழிபட்ட முறைகளை பாடல்கள் மூலமாக அறியமுடிகிறது.

‘சோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே’ - மணிவாசகர்.

‘ஆதியும் அந்தமும் அல்லாஅருட்பெருஞ் சோதி’ - மணிவாசகர்.

‘மாசற்ற சோதியே மலர்ந்த மலர்ச்சுடரே’ - மணிவாசகர்.

‘தேசவிளக்கெலாமானாய் நீயே’ - அப்பர்.

‘ஒளிவளர்விளக்கே’ - திருவிசைப்பா.

‘கற்பனைக் கடந்தசோதி’ - பெரியபுராணம்.

ஆலய வழிபாட்டுமுறைகளில் அக்னி வழிபாடு சிறப்பானதொரு இடத்தைப் பிடிக்கின்றது. யாக வழிபாட்டின் மூலமாக ஆன்மாக்களின் துன்பம் அகற்றப்படும் என்பது சம்பந்தர் வாக்கு.

‘கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே’ - சம்பந்தர்.

புந்தியினான் மறைவழியே புற்பரப்பி நெய் சமித்தை கையில் கொண்டு வேந்தழலின் வேட்டுலகின் மிகஅவிப்போர் சேரும் மிழலையாமே’ - சம்பந்தர்.

‘வேதியர் வேள்வி ஒழியாது மறைநாளும் ஓதி அரன் நாமம் உணர்த்திடும் நள்ளாரே’ - சம்பந்தர்.

“பூமென் கோதை உமையோருபாகனை ஓமஞ் செய்தும் உணர்மின்கண் உள்ளத்தால்’ - அப்பர்.

‘அந்தணர் வேள்வியும் அருமறைத்துழனியும் சேந்தமிழக்கீதமும் சீரினால் வளர்தர’ - சம்பந்தர்.

‘வட்டக்குண்டத்தில் உரிவளர்த்து ஓம்பிமறைபயில்வார்’ - சுந்தரர்.

‘நாத்திறன் மறையோர்ந்து ஓமகுண்டத்து நறுநெய்யால் மறையவர் வளர்த்த தீத்திறள் அருள்பும் பெரும் பற்றுப்புலியூர்’ - திருவிசைப்பா.

இறைவனை நாளும் துதித்து வழிபாடு செய்யும் இறைநாமங்களின் சிறப்பைச் சைவத்திருமுறைகளில் காணலாம்.

‘பூ நாளும் தலைசுமப்ப புகழ் நாமம் செவி கேட்ட நாநாளும் நவின்றேத்த பெறலாமே நல்வினையே’ - சம்பந்தர்.

‘பூவனுர் புனிதன் திருநாமத்தான



நாவினூறு னூறாயிரம் நண்ணினார்
பாவமாயினபாரில் பரியவே
தேவர்கோவினுன் செல்வர்களாவரே’ - அப்பர்.


‘பேராயிரம் பரவிவானோர் ஏத்தும் பெம்மானே’ - அப்பர்.

‘ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம்பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ’ - திருவாசகம்.

எனவே இவ்வாறு ஆகம வழிபாடுகளில் காணப்படும் இன்னோரன்ன சிறப்பான விடயங்களை எல்லாம் சைவத்திருமுறைகள் எமக்கு சிறப்பாகவும், தெளிவாகவும் எடுத்துக் காட்டியுள்ளன. ஆதலால்தான் இன்றும் ஆலய ஆகமகிரியை வழிபாட்டு முறைகளும் திருமுறைகள் ஓதும் நெறிகளும்பிரிக்கமுடியாதனவாகத் திகழ்கின்றன எனலாம்.

**சைவப்புலவர்**
**சிவஸ்ரீ பால.இந்திரக்குருக்கள்** (MA)

## சிவயோக சுவாமிகளின் நான்கு மகாவாக்கியங்கள்



ஈழத்துச் சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகளின் 58 ஆவது மகா சமாதி தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

அவரது குரு செல்லப்ப தேசிகர், யோகசுவாமிகளுக்கு ஞானத்தைப் போதிக்கும் வகையில் அருளிய மாணிக்கமணியனைய வார்த்தைகளை யோகசுவாமிகளும் தன் பக்தர்களுக்கும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார்.

மேலும் இவற்றை தன்னுடைய நற்சிந்தனையிலும் பரவலாக விரவி வைத்தார். யோகசுவாமியின் அடியார்களால் மகாவாக்கியங்கள் என்று கூறப்படும். அவை வருமாறு:-

* ‘எப்பவோ முடிந்த காரியம்’
* ‘நாம் அறியோம்’
* ‘ஒரு பொல்லாப்பும் இல்லை’
* ‘முழுதும் உண்மை’

## கோளறு பதிகம்



பாடல் - 07

**செப்பிள முலைநல்மங்கை ஒரு பாகமாக**
**விடையேறு செல்வன் அடைவார்**
**ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்**
**வினையான வந்து நலியா**
**அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

பொழிப்பு :-

இந்தப் பூவிலகிற்கே உணவூட்டிக் காக்கும் செப்புக் கிண்ணம் போன்ற மார்பகங்களையுடைய உமையம்மையை, தன் இடப்பாகத்தில் கொண்டவரும் தன்னை வந்து அடைந்த சந்திரனையும், தானே அடைத்துக்கொண்ட (பனித்த சடைக்குள்) கங்கை யோடுமான மஹா தேவனான சிவபெருமானார் என் உள்ளமெனும் இல்லத்திற் குடிபுகுந்து இருப்பதனால், எமது முன் வினையால் வாய்க்கப் பெறும், வாதம் - பித்தம் - கபம் என்ற மூன்று விதமான உடல் நோய்களோடு வெப்பம், குளிர் தாக்கி ஏற்படும் அனைத்து நோய்களும் மருந்திற்குப் பணிந்து மறைந்து போவதுபோல், அப்படியே ஆகட்டும் ஐயா என்று வணங்கிப் பணிந்து நல்லன, நல்லன, மிகவும் நல்லன, நல்லனவே சிவனடியார்களுக்குச் செய்யும்.

**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து)**

## பெரியோரைப் பேணல்



பிதா, மாதா, பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமக்கை, தமையன் மனைவி, உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை அச்சத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும். அவர்கள் குற்றஞ் செய்தார்களாயினும் அதனைச் சிறிதும் பாராட்டாது பொறுத்துக் கொள்ளல் வேண்டும். இராசா யாது குற்றஞ் செய்யினும் அவனோடு சிறிதும் எதிர்க்காது அவனுக்கு அடங்கி நடத்தல் போலவே பிதா, மாதா முதலாயினோருக்கும் அடங்கி நடத்தல் வேண்டும்.

பிதா, மாதா முதலாயினோர் முட்டுப்படாவண்ணம் இயன்றமட்டும் அன்னவஸ்திர முதலியவை கொடுத்து, அவர்களை எந்நாளும் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு வியாதி வந்தால் உடனே மனம் பதைபதைத்துச் சிறந்த வைத்தியரைக் கொண்டு மருந்து செய்வித்தல் வேண்டும். அவர்கள் ஏவிய ஏவல்களைக் கூச்சமின்றிச் செய்தல் வேண்டும். பிள்ளைகள் தங்கள் கல்விக்கும் நல்லொழுக்கத்திற்கும் இடையூறாகப் பிதா மாதாக்கள் சொல்லுஞ் சொற்களை மறுத்தல் பாவமாகாது.

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலைக்கதிர் Kalaikkathir

# இணைய வழி ஊடாக ரயில் ஆசனப் பதிவுகள்!

இலங்கையில் முதன்முறையாக ரயில் ஆசனங்களை இணையவழியூடாக (ஒன்லைன்) முன்பதிவு செய்வதற்கான இணையத்தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரயில் பயணிகள் எதிர்காலத்தில் அனைத்து ரயில்களுக்குமான ஆசனங்களையும் இணையவழியூடாக முன்பதிவு செய்து கொள்ள முடியும்.

கொழும்பு கோட்டை – பெலியத்த, பதுளை, யாழ்ப்பாணம், திருகோணமலை, தலைமன்னார் மற்றும் கண்டி போன்ற நீண்ட தூர ரயில்களுக்கான பயணச் சீட்டுக்களையும் முன்பதிவு செய்வதற்கான வசதியும் கிட்டவுள்ளது.

தற்போது ரயில் பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் நடைமுறை டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த அமைப்புக்களின் மூலம் இலத்திரனியல் ரயில் பயணச் சீட்டுக்களை வழங்கவும், அந்த பயணச் சீட்டுக்களை கியு.ஆர். குறியீடு மூலம் சரிபார்க்கவும் முடியும் என்பதால் எதிர்காலத்தில் ரயில்வே திணைக்களத்தில் காகிதப் பயன்பாடு குறைவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசன முன்பதிவுக்கான வசதி வழங்கப்பட்டுள்ள பயண இலக்கு மற்றும் ரயில் பெட்டிகளுக்கும் பல நடவடிக்கைகள் பயண அனுமதி பத்திரத்தைக் கொள்வனவு செய்வதன் மூலம் இதனூடாக சந்தர்ப்பம் கிடைப்பதுடன் மற்றும் லங்கா கியு.ஆர் உள்ளிட்ட பல முறைகளினூடாகக் கட்டணத்தை தெலுத்த முடியும்.

அத்துடன், ரிக்கெற்றிங் (365) சேவையினூடாக பதிவு செய்பவர்கள், ரயில் நிலையத்துக்குச் சென்று பயணச்சீட்டின் இலக்கத்துடன், தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் முன்பதிவு செய்த பயணச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

# பிரபாவிடம் நாட்டை கொடுத்திருக்கலாமே எனக் கேட்கின்றனர் சிங்களப் பெண்கள்!

## நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. போட்டுத்தாக்கு

நீங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் காலத்தில் அவரிடம் நாட்டைக் கொடுத்திருக்கலாமே என சிங்கள பெண்கள் கேட்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

சிங்கள மக்கள் துன்பப்படுவதை, வேதனைப்படுவதை, தெருக்களில் இறப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்காக நாம் அனுதாபப்படுகின்றோம்.

இதே விடயங்கள் எங்களது பகுதிகளில் நடக்கும் காலத்தில் விமானக்குண்டுகளுக்கும், பொஸ்பரஸ் குண்டுகளுக்கும், எறிகணைகளுக்கும், கொத்தணி குண்டுகளுக்கும் தமிழர்கள் கொல்லப்பட்ட போதெல்லாம் அதனை ஒரு நாட்டின் விடுதலையாக, தேசத்தின் விடுதலையாக இனப்படுகொலையை மறைத்து செய்த இலங்கை அரசு இன்று அதனது விளைவுகளை அனுபவிக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழக மீனவர்கள் 16 பேர் நேற்று அதிகாலை கைது!

## 7 ஆம் திகதி வரை விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 16 பேர் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஒரு படகில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 பேர் கிளிநொச்சி இரணைதீவுப் பகுதியில் கைது செய்யப்பட்டனர். அதே நேரம் மேலும் ஒரு படகில் நெடுந்தீவுப் பகுதியில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத் தரவிட்டார்.

இதே நேரம் நெடுந்தீவு கடல் பகுதிக்குள் ஊடுருவிய மீனவர்கள் நால்வரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சமயம் அவர்களையும் 7 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

# விசா கட்டணத்தில் திருத்தம் அமெரிக்க தூதரகம் அறிவிப்பு

*கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் விசா கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.*

*டொலருக்கு நிகரான தற்போதைய ரூபாவின் பெறுமதியின் ஏற்ற இறக்கம் காரணமாக இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமெரிக்கத் தூதரகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

*அதன்படி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விசா மற்றும் ஏ.சி.எஸ். சேவை கட்டணங்கள் திருத்தம் செய்யப்படும் என அறிவித்துள்ளது.*

# வீரம் விலைபோகாது...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக அரசிடம் இருந்து பயன்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அதற்கு தமிழர் தரப்பு தயக்கம் காட்டக் கூடாது. ஒரு விதத்தில், அது அரசு, தமிழர் தரப்பிற்கு அளிக்கும் அபராதம், அல்லது தனக்கு தானே விதித்துக் கொண்ட தண்டனை. தென்னிலங்கையின் பௌத்த மதம் சார்ந்து கூற வேண்டுமென்றால், பிராயசித்தம்.

### பொய்மையின் வெளிப்பாடு

இதற்கிடையில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான மரண சான்றிதழ் பெறுவதற்கான துவக்க நாள் மற்றும் கடைசி நாள் முதலியன குறித்து அரசு அறிவிப்புகள் வெளியிடலாம். இந்த பிரச்சினை குறித்து கடந்த பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருபவர்களும், குறிப்பாக அவர்களின் பின்னால் இருந்து இயக்கி வருபவர்களும் கவனித்து செயற்பட வேண்டிய விடயம் உள்ளது.

குளத்துடன் கோபித்துக் கொண்டவர்கள் போல், அரசு மேல் உள்ள கோபத்தில், மரணச் சான்றிதழை யாராவது பெறாமல் இருப்பார்களேயானால், மேற்கூறியது போன்ற பெறுபேறுகள் ஏதாவது பிற்காலத்தில் அறிவிக்கப்படுமேயானால், அவற்றிற்கு தகுதி இல்லாமல் கருதப்படலாம். பின்னர் தற்போதைய போராட்டத்தின் சாராம்சமே, பெறுபேறுகள் தொடர்பில் மாறி விடலாம்.

மேலும், மரண சான்றிதழ் பெற்றவர்களின் எண்ணிக்கையை வைத்து, அரசு, தமிழர் தரப்பின் கடந்த நிகழ்காலக் கோரிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் அரசியல் உள்நோக்கம் கற்பிக்கலாம். அதனை சர்வதேசத்திடமும் எடுத்துச்சென்று, அவர்களை தமிழர் தரப்பு ஏமாற்றி விட்டது என்று கூட வாதிடலாம். இதுவே கூட ஐ.நா. மனித உரிமை அமைப்பில் பேசுபொருள் ஆகலாம்.

அவ்வாறில்லாமல், அரசின் அறிவிப்பை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் அனைவருமே ஒட்டு மொத்தமாக சேர்ந்து கொண்டு நிராகரிக்கலாம். அரசின் அறிவிப்புகளைப் புறக்கணிக்கலாம். அவ்வாறு செய்வார்களேயானால், அதனையும் அரசு, தமிழர் தரப்பு பொய்மைகளின் வெளிப்பாடு என்று சர்வதேச மன்றில் புதியதொரு குற்றச்சாட்டை முன்வைக்கலாம். அன்றும் கூட, சர்வதேசத்தின் அனுதாபமும் ஆதரவும் தமிழர் தரப்பிற்கு இருந்தாலும், அவர்களில் ஒரு சாரார், அரசு வாதத்தை செவிமடுக்கலாம்.

அத்தகைய சூழ்நிலை, குழப்பத்தை ஏற்படுத்துமே தவிர, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு எந்தவிதத்திலும் நிவர்த்தியையும் நிம்மதியையும் அளிக்காது. இதுவே அப்பட்டமான உண்மை.

# பெரியோரைப் பேணல் ......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

'தந்தை தாய் பேண்' என்னும் நீதிமொழியைச் சிந்தியாது, மூடர்கள் அநேகர் தங்களை மிக வருத்திப்பெற்று வளர்த்த பிதா மாதாக்கள் பசித்திருப்பத் தாமுந் தம்முடைய பெண்டிர் பிள்ளைகளும் வயிறு நிறையப் புசித்துக் கொண்டு, தம்மையும் பொருளாக எண்ணி, தமக்கு வரும் பழிபாவங்கட்கு அஞ்சாது திரிகின்றார்கள். பிதா மாதாக்களையுஞ் சுற்றத்தாரையும் வஞ்சித்து அன்னியர்களுக்கு உதவி செய்கின்றார்கள்.

பிதா, மாதா முதலாயினோர் இறக்கும் பொழுது அவரைப் பிரியாது உடனிருத்தல் வேண்டும். அவர் மனங் கலங்கும்படி அவரெதிரே அழலாகாது. அவர்மனங் கடவுளுடையதிருவடியிலேஅழுந்தும்படிஅறிவொழுக்கமுடையவரைக் கொண்டு அருட்பாக்களை ஓதுவிக்கவும், நல்லறிவைப் போதிக்கவும் வேண்டும். அவர் இறந்த பின்பு உத்தரக்கிரியைகளை உலோபமின்றித் தம்பொருளவுக்கு ஏற்ப விதிப்படி சிரத்தையோடு செய்து முடித்தல் வேண்டும். வருடந்தோறும் அவர் இறந்த திதியிலும் புரட்டாதி மாசத்திலுஞ் சிரார்த்தம் தவறாமற் செய்தல் வேண்டும். அநேகர் தம் பிதாமாதாக்கள் சீவந்தர்களாய் இருக்கும்பொழுது அவர்களை அன்னவஸ்திர முதலியவை கொடுத்து பேணாது அவர்களுக்குத் துன்பத்தையே விளைவித்து, அவர்கள் இறந்தபின்பு உத்தரக்கிரியைகளை உலகத்தார் மெச்சும் பொருட்டு வெகு திரவியஞ் செலவிட்டுச் செய்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவோரறியாமை! இச் செய்கையால் வரும் பயன் யாது? உத்தரக்கிரியைச் சிறிதுபொருள் செலிவிட்டுச்செய்யலாம், அதற்குச் சிரத்தையே முக்கியம். பிதாமாதாக்கள் சீவந்தர்களாய் இருக்கும் பொழுது அவர்களை முட்டுப்படாவண்ணம் அன்னவஸ்திரங் கொடுத்துப் பாதுகாத்தலிலே இயன்றமட்டும் பொருள் செலவிடுதலே அவசியமாகும்.

பிதா, மாதா முதலிய பெரியோர்களைக் கடுஞ் சொற்சொல்லிக் கோபித்து உறுக்கிய பாவிகள், நரகத்திலே தங்கள் முகத்தை அட்டைகள் குடைந்து இரத்தங்குடிக்க, அதனாற் பதைத்து விழுவார்கள் பின்பு அவர்கள் சாகர நடுங்கி அலறும்படி இயமதூதர்கள் சுடுகின்ற காரநீரையும் உருக்கியதாமிர நீரையும் அவர்கண்மீது வார்ப்பார்கள். அப்பெரியோர்களுக்கு ஏவல் செய்யக் கூசின பாவிகளுடைய முகத்தை இயமதூதர்கள் குடாரியினாலே கொத்துவார்கள். அப்பெரியோர்களைக் கோபத்தினாலே கண்சிவந்து ஏறிட்டுப் பார்த்தவர்களுடைய கண்களிலே இயம தூதர்கள் அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளை உறுத்திக் கார நீரை வார்ப்பார்கள்.

பிதா, மாதா முதலாயினோரை நிந்தித்தவர்களும் அவர்களைப் பேணாது தள்ளி விட்டவர்களும் பைத்தியத்தினாலும் நாக்குப்புறறினாலும் நேத்திர ரோகத்தினாலும், காலிற்புண்ணினாலும் சர்வாங்க வாயுரோகத்தினாலும் பெரு வியாதியினாலும் வருந்துவார்கள். பிதா மாதா முதலாயினோரைப் பேணாதவர்களும் உபாத்தியாயர்க்குக் கொடுக்கப்பாலதாகிய வேதனத்தைக் கொடாதவர்களும் குருவுக்கு கொடுக்கற்பாலதாகிய காணிக்கையைக் கொடாதவர்களும் தரிததிரர்களாய்ப் பசியினால் வருந்திப் பெண்டிரும் பிள்ளைகளுங் கதற இரக்கத்தகாத இடங்களெல்லாம் பிச்சையிரந்து உழல்வார்கள்.

பிதா மாதாக்களுக்குச் சிராத்தஞ் செய்யாதவர்களும், புரட்டாதி மாதத்திலே மகாளயசிரார்த்தம் செய்யாதவர்களும் சிரோரோகங்களினால் வருந்துவார்கள். புலவர்களாயினும் ஞானிகளாயினும் மூடர்களாயினும் பெண்களாயினும் இறந்ததினச் சிரார்த்தத்தைச் செய்யாதொழிந்தால், கோடி சனனத்திலே சண்டாளராவார்கள்.

எவன் தன்னுடைய தாய் தந்தை முதலிய பந்துக்கள் வறுமையினால் வருந்தும் போது இம்மையிலே புகழின் பொருட்டு அன்னியருக்குத் தானங் கொடுக்கின்றானோ, அந்தத் தானந்தருமமன்று. அது முன்பு தேன் போல இனிதாயிருப்பினும் பின்பு விஷம் போலத் துன்பப்படுத்தும். பார்க்கும் போது புகழுக்கு ஏதுபோலத் தோன்றினாலும் பின்பு நரகத்துன்பத்திற்கே ஏதுவாகும் என்பது கருத்து. எவன் தான் அவசியமாகப் பாதுகாக்க வேண்டிய மனைவி, பிள்ளை முதலாயினோரைத் துன்பப்படுத்திப் பரலோகத்தின் பொருட்டுத் தானஞ் செய்கின்றானோ, அந்தத் தானமும் அவனுக்கு இம்மையாயிம் மறுமையிலும் துன்பத்தையே விளைவிக்கும்.

**(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து.....)**

# ‘எழு கதிர் ஞாயிறு’

- தி. செல்வமனோகரன் -
(விரிவுரையாளர்,
சைவசித்தாந்தத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)




ஈழத்துச் சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகளின் மகா சமாதி தினம் இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. இன்றைய தினம் சிவயோக சுவாமிகளின் நினைவுப் பேருரை யாழ் பல்கலைக்கழக ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

**‘இலங்கை வாழ்தெய்வம் எமையாளுத் தெய்வம்**
**கலங்க விடாத்தெய்வம் கைகாட்டுந் தெய்வம் - புலன்வழியிற்**
**செல்ல விடாத்தெய்வம் தேவர்தொழுந் தெய்வம்**
**நல்ல தெய்வம் நாடோறும் நாடு’**

- நற்சிந்தனை

ஈழமணித் திருநாட்டுக்கெனத் தனித்த சித்தர் பாரம்பரியம் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல மீட்டுருவாக்கங்கள், சீர்திருத்தங்கள், நவீனமாக்கல்கள் நிகழ்ந்த சூழலில் ஆன்மீகத்தளத்திலும் புதிய மாற்றங்கள் பல நிகழ்ந்தன. அவற்றுள் ஒன்றே புதிய சித்தர் மரபின் உருவாக்கம் ஆகும். ஆனைக்குட்டிச் சாமி கொழும்பிலும், பரமகுருசாமி மாத்தளையிலும், கடையிற்சுவாமி யாழ்ப்பாணத்திலும் புதிய சித்த மரபுகளின் ஊற்றுக்கண்களாய்க் காணப்பட்டனர்.

கடையிற்சுவாமிகளின் அருட்பார்வைக்கு உட்பட்டவர் செல்லப்பா சுவாமி. நல்லூர்ச்சூழலிலே பிறந்து, வாழ்ந்து கடையிற்சுவாமியின் உபதேசம் பெற்று நல்லூர்த்தேரடியில் வாழ்ந்தவர். எப்போதும் உண்மை, நேர்மை, அஞ்சாநெஞ்சு, சமூக அக்கறை, ஆன்மீகநாட்டம் என நல்லம்சம் பொருந்தி வாழ்பவர்களை நாம் ‘விசரர்’ என்றும் ‘சண்டைக்காரர்’ என்றும் ‘வாழத்தெரியாதவர்கள்’ என்றுந் தானே சொல்லி வந்திருக்கிறோம். செல்லப்பா சுவாமியின் புறத்தோற்றத்தைப் பார்த்தவர் அவரை விசர்ச் செல்லப்பா என்று பகடிபட அழைத்தனர். ‘கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’. செல்லப்பா சுவாமியின் அகத்தோற்றத்தை அறிந்துநல்லகுருநாதராகக்கொண்டுஅருளுபதேசம் பெற்று நல்லூர்த் தேரடியின் தேசிகரானார் யோகர் சுவாமிகள்.



யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் வாழ்ந்த அம்பலவாணர் - சின்னாச்சியம்மை என்னும் தம்பதியினருக்கு 1872-05-29 அன்று ஒரு ஆண் மகவு பிறந்தது. அதற்கு சதாசிவம் எனப் பெயரிட்டனர். கொழும்புத்துறையில் வாழும் சூழலில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கல்வி கற்றுப் பின் இலங்கை நீப்பாசனத்திணைக்களத்தில் களஞ்சியக் காப்பாளராகப் பணிபுரிந்தார். செல்லப்பா சுவாமியுடன் 1905 இல் ஏற்பட்ட தொடர்பு அவரை ஆன்மீகப்பாதைக்கு இட்டு வந்தது. செல்லப்பா சுவாமி எழுப்பிய ‘யாரடா நீ?’ எனும் கேள்வி அவரை சுய விசாரணைக்கு உட்படுத்தியது. குருநாதர் கூறிய ‘எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்பும் இல்லை, நாம் அறியோம், முழுதும் உண்மை’ முதலிய மகாவாக்கியங்கள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கின. உவமையிலாக் கலைஞானத்தை, உணர்வரிய மெய்ஞானத்தை ஊட்டி, சதாசிவனை ஞாலம் போற்றும் யோகர் சுவாமி ஆக்கின. அவர் 1964.03.24 அன்று தேகவியோகமடைந்தார். கொழும்புத்துறை இலுப்ப மரத்தடியில் யோக சாதனைகளில் திளைத்த யோகர் சுவாமிக்கு சுவாமி விவேகானந்தரிடமும் ஈடுபாடு இருந்தது. தல யாத்திரைக்காக இந்தியா சென்றவர் ரமண மகரிஷியையும் சந்தித்தார். தான் வாழும் பிரதேசம், நாடு என்பவற்றுக்கு அப்பால் உலகம் முழுவதும் சீடர்களை கொண்ட ஈழத்துச் சித்தராக யோகர் சுவாமியே அடையாளப்படுத்தப்படுகிறார். அவரது அருளுரைகளாலும் பாடல்களாலும் அற்புதங்களாலும் கவரப்பட்டோர் அநேகர்.



யோகர்சுவாமியின் நேரடிச் சீடர்களாக மார்க்கண்டு சுவாமி, சந்த சுவாமி, செல்லத்துரை சுவாமி முதலானவர்கள் சொல்லப்படுகின்றனர். பிரித்தானியரின் இலங்கைக்கான இறுதி ஆளுநர் சோல்பரிப் பிரபுவின் மகன் ஜேம்ஸ் ராம்ஸ் போத்தம் ஆன்மீகத் தேடலின் வழி யோகர்சுவாமிகளைக் கண்டடைந்தார். யோகர் சுவாமிகளுக்கு ‘இவர் இலங்கையின் கவர்னர் ஜென்ரலின் மகன்’ என அறிமுகம் செய்யப்பட்ட போது ‘உனக்கு கவர்னரும் நான்தான், ஜென்ரலும் நான்தான்’ என்று யோகர்சுவாமி கூறிய போது, பல முறை கற்றபோதும் விளங்காத ‘ஆதியில் அச்சொல் இருந்தது’ எனத் தொடங்கும் விவிலிய வரிகளைப் பூரணமாக விளங்கிக் கொண்டார் என ஜேம்ஸ் பதிவிடுகிறார். இவரே சந்த சுவாமி. இவர் யோகர்சுவாமியின் ஆன்மீகக் கருத்துக்களை 'Words of our master' எனும் நூலாக்கினார்.

இவரைப் போலவே கௌரிபாலா (ஜேர்மன் சுவாமி), பரிநரிக்குட்டி சுவாமி (ஆஸ்திரேலியா), அமெரிக்க ஹாவாயாதீன முதல்வர் சிவாய சுப்ரமண்யசுவாமி போன்றசீடர்களும் பிறநாட்டவர்களே. யோகர்சுவாமி ஞானாலயமாகவும் பிறநாட்டு, ஆன்மீகப்பறவைகள் தங்கிச் செல்லும் சரணாலயமாகவும் எல்லாமாகவும் திகழ்ந்தார். யோகர்சுவாமியின் பெருமையைப் பரப்பிய சுதேசிகள் பலரெனினும் அவர்களுள் மார்க்கண்டு சுவாமி, செல்லத்துரை சுவாமி போன்றோர் முக்கியமானவர்கள்.

யோகர்சுவாமிகள் தன்னிடம் அருள் வேண்டி வருபவரின் பக்குவமறிந்து அருள்பவராகவும் சிலரை ஏசித் துரத்துபவராகவும் சிலரைத் தானே அழைத்து அன்பு பொழிபவராயும் ‘அவனருளாலே அவன் தாள் வணங்கும்’ நிலையினராகத் திகழ்ந்தனர்.

அவரது போதனைகள் ‘நற்சிந்தனை’ எனும் நூலாக்கப்பட்டது. நல்ல குருநாதரின் மகாவாக்கியங்களை விளக்குவனாக அச்சிந்தனைகள் அமைந்தன. வேதாந்த, சித்தாந்த பொதுமைத் தளத்தின் வழி உலகத்து வாழ் மக்களுக்கு வழிகாட்டும் தத்துவ உரையாடல்களை, ஆன்மீக வாழ்வை அவை எடுத்துரைக்கின்றன. வாழ்தலின் அர்த்தத்தைப் பேசுகின்றன. கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், பிரபஞ்ச இல் வாழ்வின் சிறப்பு, குருநாதன் அருள், நல்லூரான் சிறப்பு, ஆன்ம சுய விசாரணை எனப் பல தளங்களில் அவை விரிகின்றன.

மக்களுக்கு வழிகாட்டுதற் பொருட்டு சிவதொண்டன் நிலையமும் சிவதொண்டன் பத்திரிகையும் இவரால் தொடங்கப்பட்டன. இவை இன்றும் மக்களை ஆன்மீகத் தளத்துக்கு வழிப்படுத்துகின்றன. சிவதொண்டன் பத்திரிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் எழுதுபவரின் பெயர் தாங்கி வருவதில்லை என்பது சுட்டத்தக்கது. கிழக்கிலங்கையிலும் சிவதொண்டன் நிலையம் தன் பணிபுரிந்து வருகின்றது. ஹாவாய் ஆதீனம் உலகெல்லாம் யோகர்சுவாமியின் பெயரால் சிவத் தியானத்தையும் ஆன்மீக வாழ்வையும் பரப்பி வருகின்றது.

யோகர்சுவாமியிடம் மதபேதம், மொழிபேதம், இனபேதம், சாதி பேதமென எப்பேதமும் இருந்ததில்லை. அதனாலேயே யாவராலும் அவரை அணுக முடிந்தது. அவரது ஞானக்கதிர்கள் உடலுள் புதைந்திருந்த ஆன்மாக்களைத் தட்டியெழுப்பின. சுய ஆத்ம விசாரணையை உருவாக்கின. உள்ளத்தில் உண்மையொளியை உண்டாக்கின. யோகர்சுவாமி தேசாந்திரியாகத் திரிந்து ஆன்ம பக்குவர்களைக் இனங்கண்டு அருள் புரிந்து வழிப்படுத்தினார். இன்று உலக தேசமெல்லாம் அவரைத் திசைமானியாகக் கொண்டு ஆன்ம பக்குவர்கள் ஆன்மீக மணம் பரப்புகின்றனர்.


**‘சுவாமி யோகநாதன் சொன்னதிருப் பாட்டைந்தும்**
**பூமியில் சொன்னாலெடி கிளியே பொல்லாங்கு தீருமடி’**

- நற்சிந்தனை



# பொருளாதார நெருக்கடியால் நிர்க்கதியாகும் ஈழத்தமிழர்கள்!

## சீமான் கடும் சீற்றம்



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தாளாது, தமிழகத்துக்கு வரும் ஈழச்சொந்தங்களை கைது செய்வது கடும் கண்டனத்துக்குரியது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் –

இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவால் அத்தியாவசியப்பொருள்களின்விலைபன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச்செலவினங்களைக்கூட எதிர் கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகிற செய்திகள் கவலையளிக்கின்றன.

சிங்கள இனவெறிபிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக்குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம்செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறிச் செயற்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணமென்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்துப் பாதிப்புக்குள்ளாகி நிற்கின்றமை பெரும் மனவேதனையைத் தருகிறது.

இவ்வளவு ஆண்டுகளாக, சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்துக்கு ஆளாகி நின்ற தமிழ்ச்சொந்தங்கள், இப்போது பொருளாதார நெருக்கடியாலும், வறுமையின் கோரப்பிடியாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில், நாளும் அல்லல்பட்டு வருவது பெரும் மனவலியைத் தருகிறது.

இத்தகைய கையறு நிலையில், தாய்த் தமிழகத்தில் தஞ்சம்கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச்சொந்தங்களை வழக்குகள் போட்டு கைது செய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களை ஆரத்தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக்கும் செய்துகொடுத்து, அவர்களைக் காக்க முன்வர வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

## யாழில் கோவிலுக்குச் சென்றவர் மயங்கி விழுந்து ஒருவர் சாவு

திருநெல்வேலி அம்மன் ஆலயத்துக்கு வழிபட வந்த ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

55 வயதுடைய ஆண் ஒருவர் வழிபாடுகளுக்காக நேற்று (வியாழக்கிழமை) ஆலயத்துக்குள் நுழைந்த போது திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

உடனே அப்பகுதியில் நின்றவர்கள் உடனடியாக நோயாளர் அம்புலன்ஸ் மூலம் அழைப்பை ஏற்படுத்திதகவல்வழங்கினர்.

அம்புலன்ஸில் வந்த வைத்தியர், மயங்கி விழுந்த நபரைப் பரிசோதித்த போது அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## முல்லை விவசாயிகளின் புத்தரிசி வழங்கும் நிகழ்வு!





முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து காலபோக நெற்செய்கையின் போது அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற்பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் முகமாக வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 3 ஆம் திகதி அநுராதபுரம் அக்ர சாஸ்ய ஜெயஶ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ளது.

இந்ம நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட புத்தரிசி சேகரிக்கும் விழா புதன்கிழமை ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தில் கமக்கார அமைப்பினர், விவசாயிகள் என பலரின் பங்கு பெற்றலுடன் சிறப்புற இடம்பெற்றது

தானாம் செய்வதில் சிறந்த விவசாயிகளாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் காணப்படுகின்றார்கள் பசளைப் பிரச்சினை, யானை அழிவு போன்ற பல்வேறு அழிவுகளுக்கு மத்தியில் அறுவடையைச் செய்த விவசாயிகள் நெல்லை அரிசியாக்கி ஒரு பகுதியை புத்தபெருமானுக்கு காணிக்கையாக செலுத்தியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட கமலநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பரணீதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி, மாவட்ட விவசாய பணிப்பாளர் கோகுலதாசன் உள்ளிட்ட பெரும்பாக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்பஉத்தியோகத்தர்கள், பண்ணை முகாமையாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டு முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் புத்தரிசி காணிக்கையை வழங்கியுள்ளார்கள்.

## முருகபூபதியின் புதிய நூல் யாதுமாகி 28 பெண் ஆளுமைகள் பற்றிய பதிவு!

### நாளை மெய்நிகரில் வெளியீடு




ஆஸ்திரேலியாவில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வதியும் எழுத்தாளர் முருகபூபதி எழுதியிருக்கும் 28 பெண் ஆளுமைகள் பற்றிய பதிவுகளைக் கொண்ட புதிய நூல் யாதுமாகி நாளை(சனிக்கிழமை) மெய்நிகரில் வெளியாகிறது.

கலை, இலக்கியம், கல்வி, ஊடகம், நடனம், தன்னார்வத் தொண்டு, சீர்மியப்பணி, திரைப்படம், விடுதலைப் போராட்டம், முதலான பல்துறைகளில் ஈடுபட்ட பெண் ஆளுமைகள் தொடர்பான தனது மனப்பதிவுகளைக் கடந்த காலங்களில் எழுதி வந்திருக்கும் முருகபூபதி, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம், கடித இலக்கியம், புனைவுசாரா பத்தி எழுத்துக்கள், திறனாய்வு முதலான துறைகளில் இதுவரையில் 25 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியியுள்ளார்.

சிறுகதைக்காகவும் நாவலுக்காகவும் இலங்கையில் தேசிய சாகித்திய விருதுகளை இருமுறை பெற்றிருக்கும் முருகபூபதி, ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கை மாணவர் கல்வி நிதியம் முதலான அமைப்புகளினதும் ஸ்தாபக உறுப்பினருமாவார்.

இந்த அமைப்புகளில் நீண்டகாலமாக அங்கம் வகித்தவாறு ஊடகங்களில் தொடர்ந்து எழுதி வரும் முருகபூபதி, அனைத்துலக பெண்கள் மாதத்தை முன்னிட்டு எழுதி, முதலில் மின்னூலாக வெளியிடவிருக்கும் யாதுமாகி நூலில் பின்வரும் பெண் ஆளுமைகள் இடம்பெற்றுள்ளனர்.

ராஜம் கிருஷ்ணன் (1925 – 2014) ,
அருண் விஜயராணி (1954 – 2015)
கமலினி செல்வராசன் (1954 – 2015),
மனோரமா ஆச்சி (1937 – 2015)
'குறமகள்' வள்ளிநாயகி இராமலிங்கம் (1933 – 2016),
கெக்கிராவ ஸஹானா (1968 – 2018) ,
தங்கேஸ்வரி (1952 – 2019) ,
தமிழ்ப்பிரியா (1952 – 2020),
பத்மா சோமகாந்தன் (1934 – 2020)
கமலா தம்பிராஜா (1944 – 2018)

பாலம்லக்ஷ்மணன், ஞானம் இரத்தினம், சகுந்தலா கணநாதன் , அன்னலட்சுமி இராஜதுரை, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, சித்திரலேகா மௌனகுரு, கார்த்திகா கணேசர், " குந்தவை ' சடாட்சரதேவி, 'ஆழியாள்' மதுபாஷினி, தேவா ஹெறால்ட் சந்திரிகா சுப்பிரமணியன், ஶ்ரீரஞ்சனி விஜேந்திரா, 'தமிழச்சி' சுமதி தங்கபாண்டியன், தமிழ்க்கவி , புஸ்பராணி, வெற்றிச்செல்வி.

இவர்களில் முதல் பத்துப்பேரும் மறைந்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

கலை, இலக்கிய ஆர்வலர் கலாநிதி கலையரசி சின்னையா நியூஸிலாந்திலிருந்து யாதுமாகி நூல் வெளியீட்டு மெய்நிகர் அரங்கிற்குத் தலைமை தாங்குகிறார்.

நூல் பற்றிய தங்கள் வாசிப்பு அனுபவத்தை, ஆஸ்திரேலியா மெல்பனிலிருந்து திருமதி விஜி இராமச்சந்திரன், சிட்னியிலிருந்து திருமதி கனகா கணேஷ், கோல்ட் கோஸ்டிலிருந்து மருத்துவர் திருமதி வாசுகி சித்திரசேனன், தமிழ்நாட்டிலிருந்து முனைவர் ஜ. வள்ளி ஆகியோர் சமர்ப்பிப்பர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு தாமோ பிரம்மேந்திரன் – கன்பரா தமிழ் அரங்கம்.

மெய்நிகர் அரங்கில் இணைந்திருப்பவர்களின் கருத்துப்பகிர்வையடுத்து நூலாசிரியர் முருகபூபதி ஏற்புரை நிகழ்த்துவார்.

ஆஸ்திரேலியா – மெல்பன் – சிட்னி : இரவு 7.00 மணி
மேற்கு ஆஸ்திரேலியா – பேர்த் – மாலை 4–00 மணி
பிறிஸ்பேர்ண் மாலை 6–00 மணி
கோல்ட் கோஸ்ட் மாலை 6–00 மணி
நியுஸிலாந்து – இரவு 9–00 மணி
இலங்கை – இந்தியா: மதியம் 1:30 மணி.
இங்கிலாந்து: காலை 8:00 மணி
பிரான்ஸ் – ஜெர்மனி: காலை 9–00 மணி
கனடா: அதிகாலை 4–00 மணி

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2022இல் வெளியிடப்பெற்றது.